ஸ்ரீ குருப்யோ நம:

# கடிகாஸ்தானம் என்றால் என்ன?

[தக்ஷசிலா (Taxila), நாளந்தா(Nalanda) முதலிய இடங்களில் இருந்ததாகக் கூறப்படும் கல்விஸ்தானங்களுக்கு காலத்தினாலோ மஹிமை பெருமைகளினாலோ எவ்விதத்திலும் குறையாத கல்விஸ்தானங்கள் சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னர் தொடங்கியே தென்னாட்டில் காஞ்சி முதலிய அநேக ஸ்தலங்களில் இருந்திருந்த உண்மை இக்கட்டுரையினால் வெளியாகிறது].

சென்னை அரசாங்கத்தாரின் கையெழுத்து புஸ்தக காரியாலயத் தாரால்(Govt. Oriental Manuscripts Library, Madras) ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்மர் என்பவரால் இயற்றப்பட்ட "ஆபோகம்" என்னும் ஒரு புஸ்தகம் சென்ற வருஷம் வெளியிடப்பட்டது.

(ஸ்ரீ சங்கரபகவத்பாதளின் ப்ரம்மஸுத்ர பாஷ்யத்திற்கு வாசஸ்பதிமிச்ரர் பாமதி என்று ஒரு வ்யாக்யானம் எழுதியிருக்கிறார். அப்பாமதிக்கு ஸ்ரீ அமலானந்தர் என்பவர் கல்பதரு என்று ஒரு வ்யாக்யானம் எழுதியிருக்கிறார். அக்கல்பதருவிற்கு ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்மர் எழுதிய வியாக்யானத்திற்கு ஆபோகம் என்று பெயர்). அப்புஸ்தகத்தைப் படித்துக்கொண்டு வரும்போது அதன் முகவுரையில் அதன் க்ரந்தகர்த்தாவான லக்ஷ்மீந்ருஸிம்மர் கோதாவரீதீரத்தில் இருந்திருக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறதைப் பார்க்க ஒரு ஸந்தேகம் ஏற்பட்டது. அவர் கும்பகோணத்திற்கடுத்த கோட்டையீரில் இருந்ததாகவும், துரீயாச்ரமத்தை ஸ்வீகரித்துக்கொண்டு அவ்வூரிலேயே ஸித்தியடைந்தாகவும், அவ்வூரில் அவர் சமாதி இன்றும் இருப்பாதகவும் பெரியோர்கள் சொல்லக் கேள்வி. ஆகையால் இவ்விஷயத்தைச் சிறிது ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று தோன்றிற்று. இதைப் பற்றி ஆராய்ச்சி செய்யும்போது ப்ரும்மஸுத்ரம் 3-4-20வது சூத்திரத்தைப்பற்றி கல்பதருக்காரர் எழுதிய வியாக்யானத்தில் "சிகை யக்ஞோபவீத விஸர்ஜனம் சன்னியாசிகளுக்கு கூடா" தென்று சொல்லுகிறவர்கள் "கடிகா ஸ்தானங்களில் 'சிகையுடன் வபனம் செய்துகொண்டு ஸுத்ரத்தையும் விடவேண்டும்', என்று ஓதப்படும் ஆதர்வண ச்ருதியை கேட்டிருக்கமாட்டார்கள்"

(येतु शिखायज्ञोपवीतत्यागरूपपारमंहस्यवृत्तिं न मन्यन्ते ते न पश्यन्ति प्रत्यक्षं **घटिकास्थानेषु** पठ्यमानाथर्वणीं श्रुतिम् – "सशिखं वपनं कृत्वा बहिस्सूत्रं त्यजेत् बुधः)" इति என்று கூறியிருக்கிறார். இந்த

வாக்யத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் 'கடிகாஸ்தானம்' என்னும் பதத்திற்கு லக்ஷ்மீந்ருஸிம்மர் வ்யாக்யானம் செய்யும்போது கடிகாஸ்தானங்கள் கோதாவரீ தீரங்களில் உள்ள விசேஷ புண்ணிய க்ஷேத்ரங்கள் "घटिकास्थानानि पुण्यक्षेत्रविशेषाः – गोदावरीतीरेषु प्रसिद्धाः॥" என்று சொல்லியிருக்கிறார். ஒருக்கால் இதையனுசரித்துத் தான் அவர் கோதாவரீ தீரத்தில் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்க வேண்டும். கல்பத்ருவுக்கு "பரிமளம்" என்ற மற்றொரு வியாக்யானம் எழுதிய ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரும் அம்மாதிரியே "கடிகாஸ்தானம்" என்னும் பெயருக்கு வியாக்யானம் செய்திருக்கிறார். அப்பய்ய தீக்ஷிதர் 'ஆபோகம்' எழுதியவருக்கு முன்காலத்திலேயே இருந்தவர் என்று தெரிகிறது. இருவரும் இவ்விதம் ஒரே மாதிரி எழுதியதற்குக் காரணம் தெரியவில்லை. "கடிகாஸ்தானம்" என்னும் பதம் எதைக் குறிக்கிறது என்னும் விஷயத்தை ஆராய வேண்டுமென்று தோன்றியது.

இதற்கிடையில் அசோகனுடைய சாஸனங்களைப் பார்க்கும்படி நேரிட்டது. அதில் அசோகரின் ராஜ்யத்தின் எல்லைகளைக் கூறுமிடத்து 'கேரள புத்த' 'சத்தபுத்த' இவர்களின் பிரதேசங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. 'கேரளபுத்த' பிரதேசம் என்றால் கேரளதேசமென்பது பிரசித்தம். ஆனால் 'சத்தபுத்த' (சத்யபுத்ர) பிரதேசம் என்பது எதுவென்று தெரியவில்லை. இதைப்பற்றி பரிசீலனை செய்யும்போது 'சத்யபுத்ர' நாடு காஞ்சிபுரத்தைத் தன் தலைநகராகக் கொண்ட தொண்டைமண்டலமாக விருக்க வேண்டுமென்று தோன்றிற்று. காஞ்சிபுரத்திற்கே 'ஸத்யவ்ரத க்ஷேத்ரம்' பெயர் ஏற்பட இவ்வூரிலேயே திருனெறிக் காரைக்காடு என்று ஒரு ஸ்தலமிருக்கிறது. புகழேந்திப்புலவர் என்னும் ஒரு தமிழ்க்கவி "வையகம் பெறினும் பொய்யுரைக்கமாட்டார். தொண்டை நாட்டார்" என்று கூறியிருக்கிறார். ஆகையால் அசோகன் சாஸனத்தில் காணப்படும் 'சத்யபுத்ர' பிரதேசம் இந்த ஸ்த்யவ்ரத க்ஷேத்திரமாகிய காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட தொண்டை மண்டலமாகத்தான் இருக்கவேண்டும் என்பதை நிச்சயமாக கூறலாம் என்று தோன்றுகிறது.

கல்வெட்டுகளை ஒரு சமயம் பார்த்து வருங்கால் கி.பி. ஐந்து- வது நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கூறப்படும், மைசூர் ராஜ்யத்தில் ஷிமோகா ஜில்லாவில் ஷிகார்பூர் தாலுகாவிலுள்ள தாளகுண்டா என்னும் ஊரில் ப்ரணவேச்வரஸ்வாமி கோவிலில் ஒரு தூணில் எழுதப்பட்டிருக்கும் சாஸனத்தில்(Talagunda pillar Inscription Ep. Ln. Vol. viii.p.24), அந்த சாஸனத்தை எழுதுவித்த காகுஸ்தவர்மன் என்னும் அரசனுக்கு முன்

இரண்டாவது தலைமுறையினனான மயூரவர்மன் (350to370 A.D.) அவனுடைய குருவாகிய வீரசன்மன் என்பவருடன் மேற்படிப்பிற்காக காஞ்சீபுரத்திலிருக்கும் “கடிகை” க்கு வந்தாகச் சொல்லப்பட்டிருந்த்து அவர்கள் அங்கு வந்தது எல்லா சாஸ்திரங்களையும் நன்று கற்றுக் கொள்ளுவதற்கு.

(यः प्रयाय पल्लवेन्द्रपुरीं गुरुणा समं वीरशर्मणा।

अधिजिगमिषुः प्रवचनं निखिलं घटिकां विवेश सुतार्कुकः॥)

என்று சொல்லப்பட்டிருந்தது. கடிகை என்றால் கல்வி கற்குமிடமாயிருக்கலாம் என்று தோன்றிற்று. ஏற்கனவே குருவினிடத்தில் படித்த மயூரவர்மனும் அவனுக்குப் பாடம் சொல்லி வைத்த அவனது குருவும் மறுபடியும் மேற்படிப்பிற்காக காஞ்சீபுரத்திலிருக்கும் கடிகைக்கு வந்தார்கள் என்றால் காஞ்சீ கடிகை எவ்வளவு உயர்ந்த ஸ்தானமாகவும் பிரசித்தி பெற்றதாகவும் இருந்திருக்க வேண்டுமென்பது ஊகிக்கக் கூடியதாயிருந்தது.

கடிகையைப் பற்றி வேறு சாஸனங்களில் சொல்லப்பட்டிருக்கிறதாவென்று ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்ததில், வட ஆற்காடு ஜில்லாவில் அரக்கோணத்திற்கு வட மேற்கில் ஏழு மைலிலுள்ள வேலூர்பாளையம் என்னுமிடத்தில் அகப்பட்ட மூன்றாவது விஜய நந்திவர்மன் (826-849 A.D.)சாஸனத்தில் “காஞ்சீபுரத்தையாண்ட ஸ்கந்த சிஷ்யன் என்னும் பல்லவ அரசன் (beginning of the 4th century) ஸத்யஸேனன் என்னும் அரசனிடமிருந்து “கடிகை’யைக் கைப்பற்றினான்.

(स्कन्दशिष्यस्ततोऽभवत्।

द्विजानां घटिकां राज्ञः सत्यसेनात् जहार यः॥)

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

S.I.I. vol. II. Part V.P. 508

(இந்த சத்யசேனன் அசோக சாசனத்து சத்யபுத்ர வம்சத்தவனாயிருக்கலாம்).

மேலே சொல்லப்பட்ட வேலூர் பாளையம் சாஸனத்திலேயே ந்ருஸிம்மவர்மன் என்னும் அரசன் காஞ்சியில் கடிகையை மறுபடியும் ஏற்படுத்தி கைலாஸநாத ஸ்வாமி கோயிலையும் கட்டினதாகச் சொல்லியிருக்கிறது.

तत्प्रसूनुः नरसिंहवर्मा पुनर्व्यधात् यो घटिकां द्विजानां।

शिलामयं वेश्म शशांकमौलेः कैलासकल्पं च महेन्द्रकल्पः॥

காஞ்சீபுரம் வைகுண்டப் பெருமாள் கோவில் சிலை செதுக்கங்களிலிருந்து ஒரு காலத்தில் காஞ்சியில் அரசனில்லாமல் போகவே காஞ்சி மஹாஜனங்கள் பல்லவ வம்சத்தைச் சேர்ந்த ஹிரண்யவர்மன் என்பவனுடைய புத்திரனான பரமேச்வரபல்லவன் என்பவனை காஞ்சிக்கு அரசனாக அனுப்ப வேண்டுமென்று கேட்பதற்காக போனதாகவும், அப்பரமேச்வரவர்மனுக்கு நந்திவர்ம பல்லவ மல்லன் என்ற பட்டப் பெயருடன் காஞ்சி அரசனாக முடி சூட்டியதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விருசமயங்களிலும் காஞ்சி "கடிகை"யைச் சேர்ந்தவர்கள் கூட இருந்து நடத்தியதாகத் தெரிகிறது.

"பரமேச்வர போத்தரயர் ஸ்வர்க்கஸ்தராவது, ராஜ்யம் உத்ஸந்நமாக மாத்ரர்களும், கடிகையாரும், மூலப்ரக்ருதியும், காடவேசகுல ஹிரண்யவர்ம மஹாராஜர் அடெக்கா ராஜபாரம் கிரஹிக்க ஸமர்த்தர் உபயகுல பரிசுத்தர் கோவலபொத்தகவென்று மந்த்ரி மண்டலமும்-மஹாஸாமந்தரும்-உபயகணத்தயாரும்-கடிகையாரும்-கூடிநந்திவர்மன் என்று அபிஷேகம் செய்து"...........[நந்திவர்ம பல்லவனுடைய காலம் 710-775 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது].

S.I.I.Vol. iv page 10Section A.

காஞ்சி கைலாஸநாத ஸ்வாமி கோயிலில் மஹா மண்டபத்தில் மேலண்டை வரிசையில் வடக்கேயிருக்கும் தூணின் மேலண்டை பாகத்தில் வரையப்பட்டிருக்கும் விக்ரமாதித்ய ஸத்யாச்ரயன் (533-545 A.D.) என்பவனுடைய, காலத்து சாஸனத்தில், காஞ்சீ கடிகையில் இருந்தவர்களை "மஹா ஜனங்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். "இந்த தர்மத்தை அழிக்கிறவர்கள் கடிகை மஹா ஜனங்களைக் கொன்ற பாவத்திற்குள்ளாவார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(Ep.In. Vol. Ill p. 360)

வட அற்காடு ஜில்லா குடியாத்தம் தாலுக்கா திருவல்லம் என்னும் கிராமத்திற்கு ஒரு மைல் வடகிழக்கிலுள்ள நீவாநதி மத்தியிலுள்ள ஒரு பாறையில் இருக்கும் சாஸனத்தில் (710-755 A.D.) "இந்ததர்மத்தை அழித்தவன் கடிகை ஏழாயிரவரையும் கொன்ற பாவத்தில் படுவான்" (s.I.I. Vol. III pt. I. page 91) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளிலிருந்து

அக்காலத்து அரசர்கள் கடிகைகளில் இருப்பவர்களிடம் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தார்கள் என்பது தெளிவாகிறது.

கடிகைகளில் வேதங்கள் சாஸ்திரங்கள் இவைகளில் தேர்ந்த பிராமணர்கள் கூடி ஆராய்ச்சி செய்து வந்திருக்கிறார்கள் என்பதும் தெரிகிறது. காசாகுடி சாஸனத்தில், “நான்கு வேதமோதும் பிராம்மணர்களுக்காக இது கட்டப்பட்டிருக்கிறது.

देवब्राह्मणसत्कृतात्मविभवः यः क्षत्रचूडामणिः । चातुर्वेद्यं अवीवृ(वि)धत् स्वघटिकां भूदेवताभक्तितः” ॥

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதே சாஸனத்தில் 23வது ச்லோகத்தில் “यस्मात्प्रभृति अलं अवर्धत धर्मकर्मदेवद्विजन्मविषयं घटिकाश्च धातुः। அவன் காலத்திலிருந்து பிராம்மணர்களுக்கான கடிகைகள் விருத்தியடைந்தன” என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

S.L.L.Vol.LL part III,No.73 page 342-6

காஞ்சியைத்தவிர இதரஸ்தலங்களிலும் கடிகைகள் இருந்திருப்பதாகத் தெரிகிறது. கோதாவரி ஜில்லா தூணி தாலுகா சிக்குல்லா அக்ரஹாரத்திலுள்ள அடிகவாணி என்னும் குளத்தை வெட்டும் போது அதிலிருந்து கிடைத்த விஷ்ணுகுண்டின வம்சத்தைச் சேர்ந்த இரண்டாவது விக்ரமேந்திரவர்மனின்(525-A.D.)தாம்ர சாஸனத்தில் “சாஸ்திரப்பிரகாரம் கடிகைகள் ஏற்படுத்தி புண்ணியம் சம்பாதித்த,

(यथाविधि विनिर्यापित घटिकावाप्तपुण्य संचयस्य)

என்று காணப்படுகிறது. EP.In.Vol.iv p.196.

பதினோராவது பன்னிரண்டாவது நூற்றாண்டுகளிலும் அதற்குப் பின்னரும் செதுக்கப்பட்ட சில கல்வெட்டுகளிலிருந்து மைசூர் சமஸ்தானத்திலும் சில விடங்களில் கடிகைகள் இருந்ததாகத் தெரிகிறது. EP.Kar.S.I.23 of 1167 S.K.197 of 1182 & C.N. 178 of 1442.

மைசூரில் சென்னராயபட்டணம் தாலுகாவிலுள்ள 1442 வருஷத்திய கல்வெட்டில் துந்துபி வருஷத்தில் சாமவேதாத்யயனத்திற்காக உத்தங்கர் சொல்லியபடி ஒரு கடிகை ஏற்படுத்தியதாக

(दुन्धुभौ हायने भाद्रपदे मासि शुभे दिने।उत्तङ्गोक्तया सामवेदे व्यधत्तघटिकाश्रमम्॥)

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

E.P.Kar.Vol.V.P.462.

மேற்கண்ட கடிகா ஸ்தானங்களெல்லாம் காஞ்சீ கடிகையைப் போல் வித்யாஸ்தானங்களாகவே இருந்து வந்திருக்கின்றன.

சில சாஸனங்களில் கடிகைகளில் இவ்வளவுபேர் இருந்தார்கள் என்று சொல்லுவதும் வழக்கமாயிருந்திருக்கிறது. சிவமாரன் என்று பெயருள்ள ப்ரித்வி கொங்கணி மஹாராஜாவினுடைய 713 A.D. வருஷத்திய மைசூர் ஸமஸ்தானம் மண்டய ஜில்லா மண்டய தாலுகா ஹளேகெரே என்னுமிடத்தில் அகப்பட்ட தாம்பரசாஸனத்தில் கடிகாஸ்தானத்தைச் சேர்ந்த ஒருவருக்கு பூமி தானம் செய்யப்பட்டதாக

("घटिकासहस्राय हरितगोत्राय माघशर्मणे।")   சொல்லப்பட்டிருக்கிறது.

E.P.Kar.Mandaya Taluk, Vol.iiip.108.

வட ஆற்காடு ஜில்லாவில் செய்யாறு தாலுகாவில் ப்ரும்மதேசம் என்னும் ஊரிலிருக்கும் சந்த்ரமௌளீச்வரர் ஆலயத்தின் கர்ப்பக்ருஹத்தில் வடவண்டை பக்கம் சுவற்றில் உள்ள பார்த்திவேந்திர வர்மனு (about 960 A.D.)டைய சாஸனங்களில் "த்ரைராஹ்ய கடிகமத்தியஸ்த மூவாயிரவர்" என்று காணப்படுகிறது.

Ins.No.194;195,197 of1915.

ஓரிடத்தில் "கடிகை ஏழாயிரவர்" என்றும், ஓரிடத்தில் "கடிகாசகஸ்ரம்" என்றும், மற்றுமோரிடத்தில் "கடிகை மத்யஸ்த மூவாயிரவர்" என்றும், கடிகைகளில் இருந்தவர்களைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறது.

அநேகமாக கடிகைகளெல்லாம் தேவாலயங்களிலேயே இருந்திருக்கலாம் என்று நினைக்கவும் இடமிருக்கிறது. மைசூர் ஸமஸ்தானத்தில் தும்கூர் ஜில்லாவில் சிராதாலுக்காவில் காமகொண்டனஹள்ளி என்னும் ஊரிலுள்ள ஹேமாவதீதொட்டப்பராலயத்தின் சமீபத்தில் உள்ள. மஹாராஜனின் (about 1167)சாசனத்திலிருந்து, ஹென்ஜெர பட்டினத்திலுள்ள கடிகா ஸ்தானத்தில் நொனம்பேச்வரஸந்நிதியில் ஒரு கிராமதானம் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

श्रीमतु हेञारपट्टणद् महाघटिकास्थान श्री नोनंबेश्वरदेवर सन्निदानदल्लि.

E.P.Kar.Vol ii p.158.

கடிகைகளில் வேதங்களும் சாஸ்திரங்களும் ஆராய்ச்சி செய்யப்பட்டு வந்தன வென்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. தாளகுண்டா சாஸனத்தில் மயூரவர்மனும் அவன் குருவும் காஞ்சீ கடிகைக்கு மேற்படிப்பிற்காக சென்றதாக ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. காசாகுடி சாஸனத்தில் சொல்லப்பட்ட கடிகையில் நான்கு வேதங்களும் ஓதப்பட்டனவென்று தெரிகிறது.

चातुर्वेद्यं अवीवृधत् स्वघटिकां भूदेवताभक्तितः॥ S.I.I.Vol ii part iiip.349.

தஞ்சாவூர் ஜில்லாவில் தற்காலம் வேப்பத்தூர் என்று சொல்லப்படும் வேம்பற்றூரில் ஒரு கடிகை இருந்ததாகவும் அங்கு நன்றாகப் படித்த வித்வான்களான க்ரமவித்துக்களும், சோமயாஜிகளும், பட்டர்களும் இருந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

Ins.293 of1908 dated 9th year of Rajendrachola I (about1021)engraved on the northwall of the Central shrine in the Vedapureeswarar temple Tirukkalithittai.

பூர்வமீமாம்ஸா சாஸ்திரத்தில் குமாரிலபட்டருடைய தந்த்ரவார்த்திகத்தில் கல்பசூத்ராதிகரணத்தில் “கடிகை” என்னும் பதம் காணப்பட்டது.

“अनुयोगेषु वेदानां घटिकामार्गवृत्तिषु। न कल्पसूत्रहीनानां लभ्यते कृत्स्नवेदता॥“ (1-3-6)

இதற்கு வியாக்யானம் செய்திருக்கும் பட்டசோமேச்வரர் என்பவர் இதன் பொருளை விளக்கும்போது “வேதங்களின் தேர்ச்சியை அறிவதற்காக அந்தந்த வேதபாகங்களின் அடையாள மிட்ட குறிப்புகளை ஒரு குடத்தில் (கடம்) போட்டு அந்தந்த உரிய பரீக்ஷை ஸமயத்தில் குடத்திலிருந்து எடுக்கப்பட்ட குறிப்பில் காணப்படும் வேதபாகத்தைக் கூறும்படி அத்யயனம் செய்தவர்கள் கேட்கப்படுவார்கள். இவ்விதம் கடிகாஸ்தானங்களில் கேள்வி கேட்பது ஸம்பிரதாயம்.

“वेदकौशलजिज्ञासार्थं तत्तत् वेदभागचिह्नलेख्यानि घटिकायां कुंभाख्यायां निक्षिप्य तत्तत् वेदभागपरीक्षाकाले तान्याकृष्य आकृष्टलेख्यचिन्हितं वेदं पठ इत्यध्येतारः अनुयुज्यन्ते इति घटिकामार्गवर्तिनोऽनुयोगः”। என்கிறார்.

ஆகவே கடத்திலுள்ள கேள்விச் சீட்டுகளின் மூலமாய் பரீக்ஷை நடத்தப்படும் இடங்களுக்கு கடிகாஸ்தானங்கள் என்று பெயர் எனவும் தெரிந்தது.

இங்ஙனம் கல்வெட்டுகளிலும் மீமாம்சா சாஸ்த்ர நூல்களிலும் கடிகையைப் பற்றிய குறிப்புகள் கிடைத்ததின் பிறகே கல்பதருவில் காணப்படும் "கடிகை" என்ற சொல்லிற்கு தீர்மானமான பொருள் விளங்குகியது.

கல்பதருவில் குறிப்பிட்டிருக்கும் கடிகாஸ்தானத்தில் நான்கு வேதங்களும் ஓதப்பட்டன என்பது "पठ्यमानां आथर्वणीं श्रुतिम्" என்று சொல்லப்பட்டிருக்கிறதிலிருந்து தெரிகிறது. வேதபாகங்கள் அத்யயன க்ரமத்தில் குருசிஷ்ய பரம்பரையில் பாராயணம் செய்யப்படவேண்டிய தென்பதை தெரியப்படுத்துவதற்காகவே **"पठ्यमानां"** என்கிறார். அதையே ப்ரமாணமாகக் கொள்ளலாம். அப்படியின்றி அச்சிட்டோ எகுதிவைத்துக்கொண்டோ இருப்பதனால் மாத்திரம் அவை ச்ருதியென்று நிச்சயமான ப்ரமாணமாகக் கொள்ளமுடியாது. ச்ருதி என்ற சொல்லிற்கே குருவின் முகத்திலிருந்து வரும் ஸ்வாத்யாத்தை தனது ச்ருதியால் (காதால்) கேட்டு அதையனுசரித்து சொல்லப்படுவதென்றே பொருள்.

மேலே கூறப்பட்ட ச்ருதி அதர்வண வேதத்தை அத்யயனம் செய்பவர்கள் சாதாரணமாய் அதிகமாகக் காணப்படுவதில்லையாதலாலும், "வித்யாஸ்தானமாகிற கடிகைகளில் கேட்கவில்லையா" என்கிறார் கல்பதருக்காரர்.

இன்னும் தக்ஷிண தேசத்தில் கடிகை என்ற பெயரில்லாவிட்டாலும் இதேமாதிரியான சில வித்யாஸ்தானங்கள் இருந்ததாயும் அங்கு அதர்வண வேதம் ஓதப்பட்டதாகவும் தெரியவருகிறது. கூடலூருக்கும் புதுச்சேரிக்கும் மத்தியிலிருக்கும் பாஹீர் என்ற ஊரில் (about 868 A.D.) ஒரு வித்யா ஸ்தானம் இருந்தது. பாஹீர் சம்பந்தமாக ஐந்து தாம்ரத்தகடுகளாலான சாஸனம் அகப்பட்டிருக்கிறது. அதிலிருந்து விஜயந்ருபதுங்கன் என்னும் அரசனுடைய ஆட்சியின் எட்டாவது வருஷத்தில் அவர் மந்திரி ஒருவனால் பாஹீர் கிராமத்திலுள்ள வித்யாஸ்தானத்திற்காக மூன்று கிராமங்கள் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.அந்த வித்யாஸ்தானத்தில் பதினான்கு கணங்கள் இருந்தன.(चतुर्दश विद्याः). அதில் நான்கு வேதங்களும் ஆறு வேதாங்களும், புராணங்களும் மீமாம்ஸையும், நியாயமும், தர்மசாஸ்திரமும் கற்றுக் கொடுக்கப்பட்டு வந்தன. S.I.I.Vol. ii part 5p.p. 513 to 517.

விழுப்புரத்திற்கும் திண்டிவனத்திற்கும் இடையிலிருக்கும் ராஜராஜசதுர்வேதி மங்கலம் என்று சொல்லப்படும் எண்ணாயிரம் என்னுமிடத்தில் ஒரு பெரிய வித்யாஸ்தானம் இருந்து வந்திருக்கிறது. அதில் 340வித்யார்த்திகளுக்கும் 14 உபாத்யாயர்களுக்கும் வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கீழ்படிப்பில் 270வித்யார்த்திகளுக்கும் மேல்படிப்பில் 70வித்யார்த்திகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் ரிக்வேதத்திற்கு 75பெயர்களும் யஜுர் வேதத்திற்கு 75பெயர்களும், சாந்தோக ஸாமத்திற்கு 20 பெயர்களும், தலவகார ஸாமத்திற்கு20 பெயர்களும், வாஜஸனீயத்திற்கு 20 பெயர்களும், அதர்வண வேதத்திற்கு 10 பெயர்களும், போதாயன க்ருஹ்ய கல்பகணங்களுக்கு 10 பெயர்களும், ரூபாவதாரம் என்னும் வியாகரண நூல் படிப்பிற்கு 40 பெயர்களும், 270 வித்யார்த்திகளுக்கு ஏற்பாடு இருந்தது. மேற்படிப்பில் வியாகரணத்திற்கு 25 பெயர்களும்,ப்ரபாகரமீமாம்ஸைக்கு 35 பெயர்களும், வேதாந்தத்திற்கு 10 பெயர்களுக்கும் ஆக 70பெயர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆக மொத்தம் 340வித்யார்த்திகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. Inscription 333 of 1917 at the time of Rajendra Chola I. (11th Century A.D.)

இவ்வூரிலேயே (எண்ணாயிரம்) இருந்த மற்றொரு சாஸனத்தின்படி 506பிராம்மணர்களுக்கு ஸந்தர்ப்பணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாகத் தெரிகிறது. வேதமறிந்த பிராமணர்களுக்கும் இதர பிராமணர்களுக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. Inscription 343 of 1917.

பதினோராவது நூற்றாண்டில் ராஜாதி ராஜனுடைய காலத்தில் (1018-1050 A.D.) பாஹூருக்குச் சமீபத்திலுள்ள த்ரிபுவனம் என்னுமிடத்திலுள்ள வரதராஜப்பெருமாள் கோயில் கீழண்டை, மேலண்டை, வடவண்டை சுவர்களிலிருக்கும் 1048ம் வருஷத்திய கல்வெட்டுக்களிலிருந்து அங்கும் ஒரு வித்யாஸ்தானம் இருந்ததாகத் தெரிகிறது. அதிலும் ரிக்வேதம் சொல்லிக்கொடுக்க 3உபாத்தியாயர்களுக்கும், யஜுர் வேதத்திற்கு 3உபாத்தியாயர்களுக்கும், சந்தோக ஸாமம், தலவகார ஸாமம், அபூர்வம், வாஜஸனீயம், போதாயனம், ஸ்த்யாஷாடம் இவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உபாத்தியாயருக்கும், ரிக்வேதம் யஜுர் வேதம் இரண்டிலும் ஒவ்வொன்றிற்கும் 60வித்யார்த்திகளுக்கும் சந்தோக ஸாமத்திற்கு 20வித்யார்த்திகளுக்கும் மற்ற சாஸ்திரங்களுக்கு 50 வித்யார்த்திகளுக்கும் ஆகமொத்தம் 190வித்யார்த்திகளுக்கும், வேதாந்தம், வியாகரணம், ரூபாவதாரம் இவை

மூன்றும் படிக்கும்70வித்யார்த்திகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த வித்யாஸ்தானத்தில் ஒரு விசேஷமான நிபந்தனையென்னவென்றால் வித்யார்த்திகளும் உபாத்யாயர்களும் படிப்பைத் தவிர வேறு விஷயங்களில் சம்பந்தப்படக்கூடாது என்பதே.

செங்கல்பட்டு ஜில்லா பழைய சீவரத்திற்கு சமீபத்தில் பாலாற்றின் தென் கரையிலிருக்கும் திருமுக்கூடல் விஷ்ணு கோயிலில் உள்ள 11ம் நூற்றாண்டு (1067A.D.) வீரராஜேந்த்ர தேவன் சாஸனத்திலிருந்து அடியில் காணப்படும் விவரங்கள் தெளிவாகின்றன. அந்தக் கோயில் வரும்படியிலிருந்து ஒரு வித்யாஸ்தானமும் வைத்திய சாலையும் நடத்தப்பட்டு வந்திருக்கிறது. இந்த வித்யாஸ்தானத்தில் ரிக்வேதமும் யஜுர் வேதமும் வியாகரணமும் ரூபாவதாரமும் சொல்லிக் கொடுக்கப்பட்டன. இந்த வித்யாஸ்தானத்தில் 60வித்யார்த்திகளுக்கு ஆகார வசதி செய்யப்பட்டிருந்தது. அதில் ரிக்வேதம் படிப்பவர்கள் 10பெயர்களுக்கும்,யஜீர் வேதம் படித்தவர் 10பெயர்களுக்கும், வியாகரணம் ரூபாவதாரம் படிப்பவர்கள் 20பெயர்களுக்கும், மஹாபாஞ்சராத்ரம் படித்தவர் 10பேர்களுக்கும், சிவப்ராம்மணர்கள்3பேர்களுக்கும், வைகானஸ பிராம்மணர்கள் 5பேர்களுக்கும், மற்றும் 2பெயர்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. S.I.I.Vol.III part I.

காசாகுடி சாஸனம், பாஹீர் சாஸனம், எண்ணாயிரம் சாஸனம் இவைகளிலிருந்து தென் தேசத்திலும் வித்யாஸ்தானங்களில் அதர்வண வேதம் ஓதப்பட்டு வந்ததென்பது தெரியவருகிறது.

எண்ணாயிரத்திற்கடுத்த பனையவரம் என்னும் ஊரிலுள்ள சாஸனத்திலிருந்து (No.3232 of 1917),அங்கு 50பிராமணர்களுக்கு ஸந்தர்ப்பணைக்கும், 10சிவயோகிகளுக்கு போஜனவசதிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டதென்று தெரிகிறது. இவ்விரண்டு இடங்களிலும் பிராமணர்கள் என்று சொல்லிவிட்டு தனியே ஸ்ரீ வைஷ்ணவர்கள் என்றும் சிவயோகிகள் என்றும் பிரித்துச் சொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் இந்த நாட்டில் விஷ்ணு கோயில்களில் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு வினியோகத்தைத் தவிர தனியாக பிராமணஸமாராதனை நடப்பதில்லை. இன்றும் மலையாளத்தில் சிவாலயங்களிலும் விஷ்ணு ஆலயங்களிலும் உத்ஸவகாலங்களில் ‘அக்ரம்’ என்னும் பெயருடன் பிராமண சமாராதனை நடத்தப்பட்டு வருகிறது. இது அக்காலத்து தமிழ் நாட்டு வழக்கத்தை அனுசரித்து வந்திருப்பதாய் தோன்றுகிறது. இக்காலத்தில் அனுபவத்தில்லாத மற்றொரு

விசேஷமும் முன்காலத்தில் இருந்ததாகத் தெரிகிறது. அதாவது விஷ்ணு ஆலயங்களில் சிவாகமங்கள் கூட படிக்கப்பட்டு வந்திருப்பதாய் தெரியவருகிறது.

திருமுக்கூடல் கலவெட்டுகளினாலும் மீமாம்ஸாசாஸ்திர நூல்களினாலும் வேதசாஸ்த்ராப்யாஸங்களும், பரீக்ஷைகளும் பெரிய முறையில் நடந்துவந்த "கடிகை"கள் பிரதானமாக காஞ்சியிலும் மற்றும் நமது நாட்டில் பலவிடங்களிலும் பலதரப்பட்ட வேத வித்துக்களுடன் கூடி விளங்கி வந்ததாகத் தெரிறது. இப்போது "கடிகை" என்னும் வார்த்தைக்கு நமக்கு பொருளே விளங்குவதில்லை. சுமார் 300வருஷங்களுக்கு முன்பு தோன்றிய அப்பய்ய தீக்ஷதர், ஆபோகக்காரர் இவர்கள் காலத்திலேயே நம் நாட்டில் கடிகாஸ்தானங்கள் குன்றியிருக்க வேண்டு மென்று தோன்றுகிறது. ஆதலால் தான் அவர்கள் கல்பதருக்காரர் சொல்லும் "கடிகாஸ்தானம்" என்பதற்கு வ்யாக்யானம் செய்யும்போது கோதாவரீ தீரத்திலுள்ள புண்ணிய க்ஷேத்திரங்களை கடிகாஸ்தானங்களென்று ஊகித்திருக்கிறார்கள்.

சமீபகாலத்தில் சிகா யக்ஞோபவீதத்துடன் கூடிய ஸன்யாஸ விஷயத்தில் சாட்யாயன உபநிஷத்தை உயர்ந்த ஆதாரமாகக் கொண்டு ஒருமாதப் பத்திரிகையில் ஒரு விசேஷ நிருபர் எழுதியிருக்கும் ஒரு வியாஸத்தில் சாட்யாயன உபநிஷத் காஞ்சியில் பிரசித்தமாக அச்சடிக்கப்பட்டிருப்பதாயும் ஆதலால் அது பிரசித்த ச்ருதியென்றும் சிகாயக்ஞோபவீத விஸர்ஜன பூர்வகமான பரமஹம்ஸ ஸன்யாஸாச்ரமத்தைப் பற்றி கல்பதருக்காரர் உதாஹரிக்கும் ஆதர்வண ச்ருதியை அப்பய்ய தீக்ஷதர் ஏதோ ஒரு மூலையில் உள்ள அப்ரசித்த ச்ருதியென்று அலக்ஷியம் செய்திருப்பதாகவும் எழுதியிருக்கிறார். உண்மையில் ஆதர்வணச்ருதி கடிகா ஸ்தானங்களில் பட்யமானச்ருதி, (அதாவது குருமுகமாக அத்யயனம் செய்யப்படும்ச்ருதி) சாட்யாயனச்ருதியோ அச்சு மாத்திரத்தில் இருக்கும் ச்ருதி. பட்யமானச்ருதியே பிரசித்தமானது. அதைக்கொண்டே "ஆதர்வண வேதிகள் கடிகாஸ்தானங்களில் படிப்பதை நேரில் பார்க்கவில்லையா" என்று கல்பதருக்காரர் கேட்கிறார். கடிகாஸ்தானங்களில் முக்கியமானது காஞ்சி கடிகாஸ்தானம்.நம் நாட்டிலும் அக்காலத்தில் ஆதர்வண வேதிகள் இருந்திருக்கிறார்கள். ஆகையால் எந்த காஞ்சியில் சாட்யாயனச்ருதி அச்சிடப்பட்டிருப்பதாக நிருபர் கூறுகிறாரோ அதே காஞ்சியில் ஆயிரக்கணக்காண வேதியர் முன்னிலையில் ஆதர்வண வேதச்ருதி ஆயிரம் வருஷங்களுக்கு முன் ஓதப்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது.

சல்வியைப் பாகங் கொண்டார்

சேந்தனை மகனாக் கொண்டார்

மல்லிகைக் கண்ணியோடு

மாமலர்க் கொன்றை சூடிக்

கல்வியைக் கரயிலாத

காஞ்சி மாநகர் தன் உள்ளால்

எல்லியை விளங்கநின்றா

ரிலங்குமேற்றளியனாரே.

அப்பர் 4வது திருமுறை
திருக்காஞ்சித்திருமேற்றளி8.

வாரிருங் குழன்மை வாணெடுங்கண்

மலைமகண் மதுவிம்மு கொன்றைத்

தாரிருந் தடமார்பு நீங்காத் தையலாளுலகுய்யவைத்த

காரிரும் பொழிற் கச்சிமூதூர்

காமக்கோட்ட முண்டாக நீர்போய்

ஊரிடும்பிச்சை கொள்வதென்னே

ஓணகந்தன்றளியுளீரே. 7வது திருமுறை, ஓணகாந்தன் தளி.6.

சுபம்.